சாதாரணக் கூட்டம்

கூட்ட எண் – 10/ 2022

திருத்தணி நகராட்சி,
நாள்: 14.10.2022

நிகழும் திருவள்ளுவர் ஆண்டு 2052, ஐப்பசி மாதம் 2–ஆம் நாள் (19.10.2022) புதன் கிழமை காலை 10.30 மணி அளவில் திருத்தணி நகராட்சி மன்ற கூடத்தில் சாதாரணக் கூட்டம் நடைபெறும். அவ்வமயம் நகர மன்ற துணைத் தலைவர் மற்றும் நகர மன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

B. Saraswathi
நகர மன்ற தலைவர்
திருத்தணி நகராட்சி.

**பொருள் எண்– 1**

திருத்தணி நகராட்சியின் ஆணையாளர், நகராட்சி பொறியாளர் ஆகியோரின் செம்டம்பர் –2022–ம் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

மன்றம் பதிவு செய்யலாம்

**பொருள் எண்– 2**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை –28 அவர்களின் கடித ந.க.எண்.18856/2022/தூஇதி2, நாள்.13.07.2022–ல் இந்நகராட்சிக்கு தூய்மை இந்தியா திட்டம் – 2.0 2022–23–ன்கீழ் கீழ் கண்ட பணிகளுக்கு நிர்வாக அனுமதி வழங்கி உத்துரவிடப்பட்டது, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், செங்கற்பட்டு அவர்களின் கடித நாள்.30.07.2022–ல் கீழ் கண்ட பணிகளுக்கு தொழில்நுட்ப அனுமதி வழங்கியதின் பேரில் ஒப்பந்தப்புள்ளி 14.09.2022 அன்று கோரப்பட்டது, இதில் கீழ் கண்ட பணிகளுக்கு இணையதளம் வாழிலாக வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. கோடியில் | ஒப்பந்த புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|
| 1 | திருத்தணி நகராட்சியில் திருக்குளம் அருகில் புதிய சமுதாய கழிப்பிடம் கட்டும் பணி (Type II) வ.எண்.18 | 25.70 | 1. திரு.சி.என்.ஆறுமுகம், ஒப்பந்ததாரர், மதிப்பீட்டைவிட 0.59% குறைவு<br>2. திரு.எம். மூர்த்தி, ஒப்பந்ததாரர், மதிப்பீட்டைவிட 1.48% அதிகம் |
| 2 | திருத்தணி நகராட்சி அரக்கோணம் சாலையில் மயானம் பகுதியில் புதிய பொது கழிப்பிடம் கட்டும் பணி (Type I) வ.எண்.19 | 32.20 | 1. திரு.எம். மூர்த்தி, ஒப்பந்ததாரர், மதிப்பீட்டைவிட 0.71% குறைவு<br>2. திரு.சி.என்.ஆறுமுகம், ஒப்பந்ததாரர், மதிப்பீட்டைவிட 1.36% அதிகம் |

அலுவலக குறிப்பு :–

1. மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. செலவினத்தில் மத்திய, மாநில அரசு மானியம் போக மீதமுள்ள தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.433/2022/இ1)

**பொருள் எண்– 3**

இந்நகராட்சியில் கீழ்கண்ட பணிகளுக்கு 21.09.2022 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. லட்சத்தில் | ஒப்பந்த புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|
| 1 | புதியதாக 4 Nos of 25 W LED Light fitting with light & 6 Nos of 90 W LED light with fitting சப்ளை செய்தல் பணி. | 0.71 | 1. M/s. Modern Electricals, ஒப்பந்ததாரர் 0.10 % மதிப்பீட்டை விட குறைவு<br>2. M/s. Mahalaxmi Enterprises, ஒப்பந்ததாரர் 1.10 % மதிப்பீட்டை விட அதிகம் |

அலுவலக குறிப்பு :–

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.
3. செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.252/2022/இ1)

**பொருள் எண்– 4**

இந்நகராட்சியில் கீழ்கண்ட பணிகளுக்கு 30.09.2022 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. லட்சத்தில் | ஒப்பந்த புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|
| 1 | திருத்தணி நகராட்சிக்கு சொந்தமான அறிஞர் அண்ணா பேருந்து நிலையத்தில், தாய்மார்கள் பாலூட்டு அறை பின்புறம் அமைந்துள்ள இடத்தில் கம்பி வேலி அமைத்தல் பணி | 0.94 | 1. M/s. RM Constructions, ஒப்பந்ததாரர், 0.15 % மதிப்பீட்டை விட குறைவு<br>2. திரு.சி.என்.ஆறுமுகம், ஒப்பந்ததாரர் 1.40 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 2 | வார்டு எண்.19, நாவிதர் நகர் பகுதியில் அமைந்துள்ள சிமெண்ட் சாலையில் ஏற்பட்டுள்ள சேதங்களை சீரமைத்தல் பணி | 0.80 | 1. M/s. RM Constructions, ஒப்பந்ததாரர், 0.25 % மதிப்பீட்டை விட குறைவு<br>2. திரு.சி.என்.ஆறுமுகம், ஒப்பந்ததாரர் 1.60 % மதிப்பீட்டை விட அதிகம் |

| | | | |
|---|---|---|---|
| 3 | வார்டு எண்.20, வாரியார் நகரில் அமைக்கப்பட்டுள்ள மழைநீர் வடிகால்வாயின் மீது ஆர்.சி.சி சிலாப் அமைத்தல் பணி | 1.40 | 1. திரு.எம். மூர்த்தி, ஒப்பந்ததாரர், 0.10 % மதிப்பீட்டை விட குறைவு<br>2. M/s. RM Constructions, ஒப்பந்ததாரர் 1.20 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 4 | வார்டு எண்.19, அரக்கோணம் சாலையில் அமைந்துள்ள உழவர் சந்தை வாயிலில் புதியதாக 4 எண்ணிக்கை ஸ்டீல் பங் கடைகள் அமைத்தல் பணி | 4.10 | 1. M/s. RM Constructions, ஒப்பந்ததாரர், 0.15 % மதிப்பீட்டை விட குறைவு<br>2. திரு.சி.என்.ஆறுமுகம், ஒப்பந்ததாரர் 1.15 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 5 | வார்டு எண்.20, பெரியார் நகரில் சேதமடைந்துள்ள குடிநீர் பகிர்மான குழாயினை புதியதாக ஜி.ஐ பைப்பாக மாற்றி அமைத்தல் பணி | 0.60 | 1. திரு.எ.பிரசாத், ஒப்பந்ததாரர், 0.10 % மதிப்பீட்டை விட குறைவு<br>2. திரு.எஸ். குமார், ஒப்பந்ததாரர் 1.25 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 6 | பசுமை உரக் குடிலில் சேதமடைந்துள்ள PVC கழிவு நீர் குழாய்யினை அப்புறப்படுத்தி புதியதாக மேல் மூடியுடன் கூடிய ஆர்.சி.சி கால்வாய் அமைக்கும் பணி. | 1.45 | 1. திரு.எம். மூர்த்தி, ஒப்பந்ததாரர், 0.10 % மதிப்பீட்டை விட குறைவு<br>2. M/s. RM Constructions, ஒப்பந்ததாரர் 1.20 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 7 | இரயில் நிலையம் எதிரில் அமைந்துள்ள, அம்மா உணவகம் பின்புறம் அமைக்கப்பட்டுள்ள இரு சக்கர நிறுத்தும் இடத்தில் மின் வசதி செய்தல், வாகனம் நிறுத்தும் இடத்தில் தரை தளம் அமைத்தல் மற்றும் CC TV Camera பொருத்தும் பணி | 5.00 | 1. M/s. RM Constructions, ஒப்பந்ததாரர், 0.15 % மதிப்பீட்டை விட குறைவு<br>2. திரு.சி.என்.ஆறுமுகம், ஒப்பந்ததாரர் 1.15 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 8 | வார்டு எண்.05, நாகாலம்மன் கோயில் அருகில் ஸ்டீல் பங்க் கடைகள் அமைத்தல் பணி | 7.40 | 1. திரு.கே.கமலநாதன், ஒப்பந்ததாரர், 0.10 % மதிப்பீட்டை விட குறைவு<br>2. திரு.சி.என்.ஆறுமுகம், ஒப்பந்ததாரர் 1.25 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 9 | வார்டு எண்.10, சித்தூர் சாலை, நகர்புற வீடற்றவர் தம்கும் இடத்தின் அருகில் கடைகள் அமைத்தல் பணி | 9.00 | 1. திரு.சி.என்.ஆறுமுகம், ஒப்பந்ததாரர் 0.10 % மதிப்பீட்டை விட குறைவு<br>2. M/s. RM Constructions, ஒப்பந்ததாரர், 1.60 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 10 | வார்டு எண்.02 மற்றும் 07 பொது மக்களின் நலன் கருதி கம்பர் தெருவிலிருந்து | 1.30 | 1. திரு.சி.என்.ஆறுமுகம், ஒப்பந்ததாரர், |

| | | | |
|---|---|---|---|
| | சென்னை பை–பாஸ் சாலை இறங்கும் பாதையில் இருபுறமும் Stainless Steel–ஆனா கை பிடி அமைத்தல் பணி | | 0.20 % மதிப்பீட்டை விட குறைவு<br>2. M/s. RM Constructions, ஒப்பந்ததாரர்<br>1.10 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 11 | வார்டு எண்.16, ஜோதி நகர் வேணுகோபால் கோயில் குறுக்கு தெருவில் அமைந்துள்ள சேதமடைந்துள்ள சிறுபாலத்தினை சீரமைத்தல் பணி | 1.00 | 1. திரு.எ.பிரசாத், ஒப்பந்ததாரர்,<br>0.15 % மதிப்பீட்டை விட குறைவு<br>2. திரு.எஸ். குமார், ஒப்பந்ததாரர்<br>1.50 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 12 | வார்டு எண்.14, பாலாஜி நகரில் அமைந்துள்ள மழைநீர் வடிகால்வயின் மீது ஆர்.சி.சி சிலாப் அமைத்தல் பணி | 0.58 | 1. திரு.ஜி.ரவீந்திரா, ஒப்பந்ததாரர்,<br>0.10 % மதிப்பீட்டை விட குறைவு<br>2. திரு.சி.என்.ஆறுமுகம், ஒப்பந்ததாரர்<br>1.60 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 13 | வார்டு எண்.2, மாருதி தெரு, குமரன் தெரு ஆகிய தெருக்களில் புதியதாக மழைநீர் வடிகால்வாய் அமைத்தல் மற்றும் ஒத்தவாடை தெருவில் மேல் மூடியுடன் கூடிய மழைநீர் வடிகால்வாய் அமைத்தல் பணி | 2.95 | 1. M/s. RM Constructions, ஒப்பந்ததாரர்,<br>0.20 % மதிப்பீட்டை விட குறைவு<br>2. திரு.சி.என்.ஆறுமுகம், ஒப்பந்ததாரர்<br>1.20 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 14 | வார்டு எண்.4, கலைஞர் நகரில் புதியதாக சிறுபாலம் அமைத்தல் பணி | 1.35 | 1. திரு.கே.கமலநாதன், ஒப்பந்ததாரர்,<br>0.10 % மதிப்பீட்டை விட குறைவு<br>2. திரு.சி.என்.ஆறுமுகம், ஒப்பந்ததாரர்<br>1.25 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 15 | வார்டு எண்.9, ஆச்சாரி தெரு, குறுக்கு தெருவில் மேல் மூடியுடன் கூடிய மழைநீர் வடிகால்வாய் அமைத்தல் பணி | 2.00 | 1. திரு.சி.என்.ஆறுமுகம், ஒப்பந்ததாரர்,<br>0.10 % மதிப்பீட்டை விட குறைவு<br>2. M/s. RM Constructions, ஒப்பந்ததாரர்<br>1.20 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 16 | வார்டு எண்.20, பெரியார் நகரில் அமைந்துள்ள மழைநீர் வடிகால்வாயின் மீது ஆர்.சி.சி சிலாப் அமைத்தல் பணி | 1.10 | 1. திரு.எம். மூர்த்தி, ஒப்பந்ததாரர்,<br>0.10 % மதிப்பீட்டை விட குறைவு<br>2. M/s. RM Constructions, ஒப்பந்ததாரர்<br>1.20 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 17 | வார்டு எண்.04, நல்லதண்ணீர் குளத்திற்கு மழைநீர் செல்ல தேசமடைந்துள்ள மழைநீர் | 2.50 | 1. திரு.கே.கமலநாதன், ஒப்பந்ததாரர்,<br>0.20 % மதிப்பீட்டை விட குறைவு |

| | | | |
|---|---|---|---|
| | வடிகால்யினை சீரமைத்து கால்வாயின் மேல் ஆர்.சி.சி சிலாப் அமைத்தல் பணி | | 2. திரு.சி.என்.ஆறுமுகம், ஒப்பந்ததாரர் 1.50 % மதிப்பீட்டை விட அதிகம் |
| 18 | காநிதிஜி நூற்றாண்டு நினைவு மேல்நிலை நீர்தேக்க தொட்டியில் அமைந்துள்ள 5HP Monobloc மின் மோட்டாரினை மாற்றி புதியதாக 5HP Monobloc மின் மோட்டார் சப்ளை செய்து பொருத்தும் பணி. | 0.43 | 1. திரு.எ.பிரசாத், ஒப்பந்ததாரர், 0.10 % மதிப்பீட்டை விட குறைவு 2. திரு.எஸ். குமார், ஒப்பந்ததாரர் 1.25 % மதிப்பீட்டை விட அதிகம் |

**அலுவலக குறிப்பு :–**

1. மேற்கண்ட பணிகளுக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.252/2022/இ1)

**பொருள் எண்– 5**

மாவட்ட ஆட்சித் தலைவர், திருவள்ளூர் அவர்களின் ஆய்வு கூட்ட அறிவுரை நாள்.07.07.2022–ல் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.12–ல் அமைந்துள்ள நகர்புற ஆரம்ப சுகாதார நிலையத்தில் அமைந்துள்ள மின் விளக்குகளை மாற்றி புதியதாக LED மின் விளக்குகள் மற்றும் அதற்கான மின் இணைப்பு சுட்சுகள் அமைத்து தரக் கோரி தெரிவிக்கப்பட்டது, அதன் அடிப்படையில் நகர்புற ஆரம்ப சுகாதார நிலையத்தில் அமைந்துள்ள மின் விளக்குகளை மாற்றி புதியதாக LED மின் விளக்குகள் மற்றும் அதற்கான மின் இணைப்பு சுட்சுகள் ஆகியவைகள் சப்ளை செய்து பொருத்தும் பணினை இந்நகராட்சியின் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் M/s.R.M. Construction என்பவர் மூலம் மதிப்பீட்டு விலை விகிதத்தில் ஒப்படைப்பு பணியாக தொகை ரூ.30,000/– மதிப்பீட்டில் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : -**

1. இந்நகராட்சியின் பதிவு பெற்ற ஒப்பந்ததார் M/s.R.M. Construction என்பவர் மூலம் மதிப்பீட்டு விலை விகிதத்தில் ஒப்படைப்பு பணியாக மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.252/2022/இ1)

**பொருள் எண்– 6**

இந்நகராட்சியின் கட்டுப்பாட்டில் உள்ள பூங்காக்கள் மற்றும் வார்டு எண்.1 முதல் 21 வார்டுகளில் உள்ள தெருக்களில் இருபுறமும் வளர்ந்து வரும் செடிகளை அகற்றுவதற்கு தேவையான இயந்திரங்கள் 5 எண்ணிக்கை சப்ளை செய்தல் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.1.28 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

   **(ந.க.எண்.252/2022/இ1)**

**பொருள் எண்– 7**

இந்நகராட்சியின் பொது சுகாதரப் பிரிவில் இயங்கும் TATA Ace வாகனம் எண்.TN 20 CS 9316, TN 20 CS 9326 மற்றும் TN CS 9258–ன் உள்ள பேட்டரிகள் பழுதடைந்துள்ளதால் வாகனத்தினை இயக்குவது சீரமமாக உள்ளது, எனவே பழுதடைந்துள்ள பேட்டரிகளை மாற்றி புதியதாக மூன்று எண்ணிக்கை பேட்டரிகளை சப்ளை செய்து பொருத்தும் பணிக்கு **21.09.2022** அன்று வரப்பெற்ற உள்ளூர் விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | விலை விகிதம் (ஒரு பேட்டரியின் விவரம்) |
|---|---|---|
| 1 | Sree Balaji Power System, No.20A, Chennai By-Pass Road,Thiruthani – 631 209. | 4200/– |
| 2 | Sri Ramya Battery Sales Service, No.54/37, Bazaar Street, Thiruthani – 631 209. | 4320/– |
| 3 | Vijaya Battery Electrical Works, No.297/99, Chennai By-Pass Road, Thiruthani – 631 209. | 4370/– |

**அலுவலக குறிப்பு :-**

1. மேற்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள Sree Balaji Power System, No.20A, Chennai By-Pass Road,Thiruthani – 631 209 என்ற நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. செலவினத் தொகை ரூ.**12,600/–** நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

   **(ந.க.எண்.252/2022/இ1)**

**பொருள் எண்– 8**

மாவட்ட ஆட்சித் தலைவர், திருவள்ளூர் அவர்களின் ஆய்வு கூட்ட அறிவுரை நாள்.**07.07.2022**–ல் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.**12**–ல் அமைந்துள்ள நகர்புற ஆரம்ப சுகாதார நிலையத்தில் மழை காலங்களில் மழைநீர் கசிவதால் நோயாளிகள் மிகவும் சீரமத்திற்கு ஆளகின்றனர் எனவே மழைநீர் கசியாவண்ணம் கட்டிடத்தினை சீரமைத்து தரக் கோரியும் மேலும் புதியதாக **6** எண்ணிக்கை Wall Mounted Fan பொருத்தி தரக் தெரிவிக்கப்பட்டது அதன் அடிப்படையில் நகர்புற ஆரம்ப சுகாதார நிலைய கட்டிடத்தினை சீரமைத்தல் மற்றும் புதியதாக Wall Mounted Fan **6** எண்ணிக்கை சப்ளை செய்து பொருத்தும் பணினை இந்நகராட்சியின் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் M/s.R.M. Construction என்பவர் மூலம் மதிப்பீட்டு விலை விகிதத்தில் ஒப்படைப்பு பணியாக தொகை ரூ.**45,000/–** மதிப்பீட்டில் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : -**

1. இந்நகராட்சியின் பதிவு பெற்ற ஒப்பந்ததார் M/s.R.M. Construction என்பவர் மூலம் மதிப்பீட்டு விலை விகிதத்தில் ஒப்படைப்பு பணியாக மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
   (ந.க.எண்.252/2022/இ1)

**பொருள் எண்– 9**

இந்நகர மன்ற தீர்மான எண்.147 நாள்.12.09.2022–ன் படி திருத்தணி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.05, நாகாலம்மன் கோயில் அருகில் ஸ்டீல் பங்க் கடைகள் அமைத்தல் பணிக்கு தொகை ரூ.7,40,000/–க்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட 9 எண்ணிக்கை கடைகளுக்கான வைப்பு தொகை ரூ.25,000/– மற்றும் மாத வாடகை ரூ.750/– வீதம் நிர்ணயம் செய்து முன்ஒப்பந்தப்புள்ளிகள் (மற்றும்) ஏலம் கோர மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.252/2022/இ1)

**பொருள் எண்– 10**

இந்நகர மன்ற தீர்மான எண்.146 நாள்.12.09.2022–ன் படி திருத்தணி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.10, சித்தூர் சாலை, நகர்புற வீடற்றவர் தம்கும் இடத்தின் அருகில் ஸ்டீல் கடைகள் அமைத்தல் பணிக்கு தொகை ரூ.9,00,000/–ல் பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட 8 எண்ணிக்கை கடைகளுக்கான வைப்பு தொகை ரூ.50,000/– மற்றும் மாத வாடகை ரூ.2,500/– வீதம் நிர்ணயம் செய்து முன்ஒப்பந்தப்புள்ளிகள் (மற்றும்) ஏலம் கோர மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.252/2022/இ1)

**பொருள் எண்– 11**

இந்நகர மன்ற தீர்மான எண்.130 நாள்.12.09.2022–ன் படி திருத்தணி நகராட்சி, வார்டு எண்.19, அரக்கோணம் சாலையில் அமைந்துள்ள உழவர் சந்தை வாயிலில் புதியதாக 4 எண்ணிக்கை ஸ்டீல் பங் கடைகள் அமைத்தல் பணிக்கு தொகை ரூ.4,10,000/–ல் பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. மேற்கண்ட 4 எண்ணிக்கை கடைகளுக்கான வைப்பு தொகை ரூ.50,000/– மற்றும் மாத வாடகை ரூ.3,000/– வீதம் நிர்ணயம் செய்து முன்ஒப்பந்தப்புள்ளிகள் (மற்றும்) ஏலம் கோர மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க.எண்.252/2022/இ1)

பொருள் எண்– 12

திருத்தணி நகராட்சிக்குட்பட்ட காமராஜ் மார்கெட்டில் உள்ள கடை எண்கள்.24,26,27,28,29,30,31,37 மற்றும் 43 ஆகிய கடைகள் காலியாக உள்ள கடைகளுக்கு இவ்வலுவலக ஒப்பந்தப்புள்ளி ந.க.எண்.1364/2015/அ1 நாள்.10.08.2022, 23.08.2022 மற்றும் 02.09.2022 ஆகிய தேதிகளில் அறிவிக்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கீழ்காணும் விவரப்படி தெரிவிக்கப்பட்டது.

| குத்தகை இனம் விவரம் | 01.01.2021 பின்னர் பெறப்பட்ட சொத்தின் மதிப்பு சான்று | சொத்து மதிப்பு சான்று உள்ளவர்கள் செலுத்த வேண்டிய வைப்புத் தொகை | சொத்து மதிப்பு இல்லாதவர்கள் செலுத்த வேண்டிய வைப்புத் தொகை |
|---|---|---|---|
| காமராஜ் மார்கெட் கடை எண்கள்.24,26,27,28,29,30,31,37 மற்றும் 43 | ரூ.2,00,000/- | ரூ.10,000/- | ரூ.20,000/- |

மேலே குறிப்பிட்டுள்ளவாறு வைப்பு தொகை நிர்ணயம் செய்யப்பட்டு குத்தகை உரிமம் கோரப்பட்டதில் வைப்புத் தொகை அதிகமாக உள்ளது என எவரும் குத்தகை உரிமம் கோரமுன்வரவில்லை. இதனால் நகராட்சிக்கு வரக்கூடிய வருவாயில் இழப்பீடு ஏற்படுவதோடு கடைகள் பராமரிப்பின்றி சிதலடைவதாலும் நகராட்சியின் வருவாய் நலன் கருதி மேலே குறிப்பிட்டுள்ள குத்தகை வைப்புத்தொகையினை ரூ.20,000/-லிருந்து ரூ.10,000-மாக குறைத்திட மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : -**

மன்றம் அனுமதி வழங்கலாம்
(ந.க.எண்.1364/2015/அ1)

**பொருள் எண். 13**

நகராட்சிக்கு தேவையான படிவங்கள் பதிவேடுகள், எழுது பொருட்கள் மற்றும் டோனர்களின் இருப்பு குறைவாக இருப்பதால் 2022–23ம் ஆண்டிற்கு அலுவலக பயன்பாட்டிற்கு தேவையான படிவங்கள் பதிவேடுகள், எழுது பொருட்கள் மற்றும் டோனர்கள் சப்ளை செய்யும் பணியினை மேற்கொள்ள அதற்கான உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.4.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.252/2022/இ1)

**பொருள் எண். 14**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் ரயில் நிலையம் எதிரில் (அம்மா உணவகம் பின்புறம்) அரசு புறம்போக்கு இடத்தில் நகராட்சி மூலம் இரு சர்க்கர வாகனம் நிறுத்தம் ஏற்படுத்த வாகனம் நிறுத்தும் பந்தல் அமைத்தல் பணி தொகை ரூ.19.48 லட்சத்தில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு பணி முடிவுற்றுள்ளது, மேலும் இரு சக்கர வாகனம் நிறுத்தும் இடத்தில் அருகில் ஏற்கனவே அமைந்துள்ள இரு சக்கர வாகனம் நிறுத்தத்தில் ஒரு வாகனத்திற்கு ரூ.10/– வீதம் (24 மணி நேரத்திற்கு) என வசூலிக்கப்படுவது தெரியவருகிறது, எனவே மேற்படி நகராட்சி

மூலம் அமைக்கப்பட்டுள்ள இரு சக்கர வாகனம் நிறுத்தத்திற்கு இரு சர்க்கர வாகனம் ஒன்றுக்கு ரூ.10/– வீதம் 24 மணி நேரத்திற்கு என நிர்ணயம் செய்து நகராட்சி பணியாளர் மூலம் மேற்கண்ட வசூல் பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : -**

மன்றம் அனுமதி வழங்கலாம்
(ந.க.எண்.1364/2015/அ1)

**பொருள் எண். 15**

திருத்தணி நகராட்சி எல்லைக்குட்பட்ட, வார்டு எண்.02, மாருதி நகரில் அமைந்துள்ள மழைநீர் வடிகால்வாயில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சீரமைத்து கால்வாயின் மீது கவர் ஆர்.சி.சி சிலாப் அமைத்தல் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.1.65 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : -**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.252/2022/இ1)

**பொருள் எண். 16**

திருத்தணி நகராட்சி எல்லைக்குட்பட்ட, வார்டு எண்.06, அரசினர் ஆண்கள் டேல்நிலை பள்ளி எதிரில் அமைந்துள்ள மழைநீர் வடிகால்வாயின் மீது ஆர்.சி.சி கவர் சிலாப் அமைத்தல் மற்றும் சிறுபலாம் அமைத்தல் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.1.50 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : -**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.252/2022/இ1)

**பொருள் எண். 17**

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை –28 அவர்களின் செயல்முறை உத்துரவு ந.க.எண்.20800/2021/UPA நாள்.07.10.2022–ல் உலக வீடற்றவர்கள் தினம் முன்னிட்டு நகராட்சி பகுதியில் தேசிய நகர்புற வாழ்வாதார திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள நகர்புற வீடற்றவர் தங்கும் விடுதியில் 09.10.2022 மற்றும் 10.10.2022 ஆகிய இரண்டு திங்களுக்கு ஒலி, ஒளி வசதிகள் ஏற்பாடு செய்தல், விடுதியில் தங்கியுள்ள நபர்களுக்கு மருத்துவ பரிசோதனை, காலை உணவு மற்றும் தேனீர், மதிய உணவு மாலை தேனீர் மற்றும் இரவு உணவு ஆகிய வசதிகளை ஏற்படுத்தி தரக் கோரி உத்திரவிடப்பட்டுள்ளது, எனவே மேற்படி தேசிய நகர்புற வாழ்வாதார திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள நகர்புற வீடற்றவர் தங்கும் விடுதியில் 09.10.2022 மற்றும் 10.10.2022 ஆகிய இரண்டு தினங்களுக்கு ஒலி, ஒளி வசதிகள், நாற்காலிகள் மற்றும் டேபிள்கள் சப்ளை செய்யும் பணிக்கு 07.10.2022 அன்று கோரப்பட்ட உள்ளூர் விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் | விலை விகிதம் | | | |
|---|---|---|---|---|---|
| | | வண்ண விளக்கு (ஒரு நாள் வாடகை) | நாற்காலி ஒன்றுக்கு (40 நாற்காலிகள் எண்ணிக்கை) | டேபிள் ஒன்றுக்கு (4 எண்ணிக்கை) | ஒலி |
| 1 | பிரேம் ஆடியோ & லைடிங், நெ.1, அமிர்தாபுரம், சித்தூர் ரோடு, திருத்தணி. | 2500 | 7 | 35 | 1500 |
| 2 | மணி ஆடியோ & லைடிங் நெ.225, நல்லாங்குளம், சித்தூர் ரோடு, திருத்தணி. | 2670 | 7.50 | 40 | 1550 |
| 3 | குமார் ஆடியோ & லைடிங் நெ.105, குமாரகுப்பம், சித்தூர் ரோடு, திருத்தணி. | 2690 | 8.25 | 50 | 1625 |

அலுவலக குறிப்பு : -

1. வரபெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள பிரேம் ஆடியோ & லைடிங், நெ.1, அமிர்தாபுரம், சித்தூர் ரோடு, திருத்தணி என்பரின் விலைப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. செலவினத் தொகை ரூ.8,840/—னை தேசிய நகர்புற வாழ்வாதார திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.252/2022/இ1)

<u>பொருள் எண். 18</u>

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை —28 அவர்களின் செயல்முறை உத்துரவு ந.க.எண்.20800/2021/UPA நாள்.07.10.2022—ல் உலக வீடற்றவர்கள் தினம் முன்னிட்டு நகராட்சி பகுதியில் தேசிய நகர்புற வாழ்வாதார திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள நகர்புற வீடற்றவர் தங்கும் விடுதியில் 09.10.2022 மற்றும் 10.10.2022 ஆகிய இரண்டு திங்களுக்கு ஒலி, ஒளி வசதிகள் ஏற்பாடு செய்தல், விடுதியில் தங்கியுள்ள நபர்களுக்கு மருத்துவ பரிசோதனை, காலை உணவு மற்றும் தேனீர், மதிய உணவு மாலை தேனீர் மற்றும் இரவு உணவு ஆகிய வசதிகளை ஏற்படுத்தி தரக் கோரி உத்திரவிடப்பட்டுள்ளது, எனவே மேற்படி தேசிய நகர்புற வாழ்வாதார திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள நகர்புற வீடற்றவர் தங்கும் விடுதியில் 10.10.2022 அன்று மட்டும் தினம் மட்டும் விடுதியில் தங்கியுள்ள நபர்களுக்கு காலை உணவு மற்றும் தேனீர், மதிய உணவு மாலை தேனீர் மற்றும் இரவு உணவு ஆகிய பணிகளை மேற்கொள்ள 07.10.2022 அன்று கோரப்பட்ட உள்ளூர் விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் | விலை விகிதம் (ஒன்றின் விலை) | | | |
|---|---|---|---|---|---|
| | | காலை உணவு | தேனீர் (காலை மற்றும் மாலை இரண்டு வேலை) | மத்திய உணவு | இரவு உணவு |
| 1 | சங்கர் டிபன் சென்டர், மேட்டுத் தெரு, திருத்தணி. | 75 | 10 | 120 | 75 |
| 2 | வேலு மெஸ், நரசிம்ம சாமி கோயில் தெரு, திருத்தணி. | 85 | 12 | 130 | 85 |
| 3 | அரவி.த்ர் மெஸ், கடப்பா டிரங்கு சாலை, திருத்தணி. | 95 | 15 | 135 | 95 |

**அலுவலக குறிப்பு : -**

1. வரபெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள சங்கர் டிபன் சென்டர், சன்னதி தெரு, திருத்தணி என்பரின் விலைப்புள்ளியினை ஏற்க மன்றம் அனுமதி வழங்கலாம்.
3. செலவினத்தை ரூ.14,500/—னை தேசிய நகர்புற வாழ்வாதார திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
   (ந.க.எண்.252/2022/இ1)

**பொருள் எண். 19**

திருத்தணி நகராட்சி எல்லைக்குட்பட்ட, வார்டு எண்.06, காந்தி ரோடு மெயின் (சார் பதிவாளர் அலுவலகம்) சாலையில் ஆர்.சி.சி சிலாபுடன் கூடிய மழைநீர் வடிகால்வாய் அமைத்தல் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.4.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : -**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
   (ந.க.எண்.252/2022/இ1)

**பொருள் எண். 20**

திருத்தணி நகராட்சி எல்லைக்குட்பட்ட, வார்டு எண்.06, காந்தி ரோடு மெயின் (நல்லாண் குளம் எதிரில்) சாலையில் ஆர்.சி.சி சிலாபுடன் கூடிய மழைநீர் வடிகால்வாய் அமைத்தல் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.8.55 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : -**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
   (ந.க.எண்.252/2022/இ1)

**பொருள் எண்– 21**

இந்நகராட்சியில் கீழ்கண்ட பணிகளுக்கு 11.10.2022 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப் புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. லட்சத்தில் | ஒப்பந்த புள்ளி விலை விகிதம் |
|---|---|---|---|
| 1 | திருத்தணி நகராட்சி பகுதியில் உள்ள தெருவிளக்குகளை பராமரிப்பு பணி மேற்கொள்ள தேவையான உதிரி பாகங்கள் சப்ளை செய்யதல் பணி. | 5.00 | 1. M/s. Modern Electricals, ஒப்பந்ததாரர்<br>0.10 % மதிப்பீட்டை விட குறைவு<br>2. M/s. Mahalaxmi Enterprises, ஒப்பந்ததாரர்<br>1.00 % மதிப்பீட்டை விட அதிகம் |

**அலுவலக குறிப்பு :–**

1. மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s. Modern Electricals, என்பவருக்கு பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
   (ந.க.எண்.252/2022/இ1)

**பொருள் எண். 22**

திருத்தணி நகராட்சி. திவான் பகதூர் பொலினி பூங்காவில் போதிய அளவு மின் விளக்குகள் இல்லாததால் புதியதாக 15 எண்ணிக்கை LED விளக்குகள் மற்றும் மின் விளக்கு இல்லாத நகரின் முக்கிய சாலைகளில் மின் விளக்குகள் பொருத்த புதியதாக 25 எண்ணிக்கை LED மின் விளக்குகள் ஆக மொத்தம் 40 LED மின் விளக்குகள் சப்ளை செய்யும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுதொகை ரூ.4.31 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : -**

செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.252/2022/இ1)

**பொருள் எண். 23**

தமிழ்நாடு மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறை, தானியங்கிப் பொறியாளர், அரசுத் தானிங்கிப் பணிமனை, காஞ்சிபுரம் அவர்களின் செயல்முறை நடவடிக்கை மூ.மு.செ.மு.ஆணை எண்.அ4/1340/2022 நாள்.29.09.2022–ல் திருத்தணி நகராட்சியில் ஆணையரின் பயன்பாட்டிற்கு பயன்படுத்தப்பட்டு வந்த பொலிரோ வாகனம் LX TN 20 AD 6402–னை கழிவு நீக்கம் செய்யவும் அதற்கான தொகை ரூ.32,000/–க்கு குறையாமல் விற்பனை செய்து கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது, எனவே மேற்படி வாகனத்தினை பொது ஏலம் மூலம் கழிவு நீக்கம் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : -**

தமிழ்நாடு மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறை மூலம் கழிவு நீக்கம் செய்ய நிர்ணயக்கப்பட்ட தொகைக்கு பொது ஏலம் மூலம் நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.252/2022/இ1)

**<u>பொருள் எண். 24</u>**

தமிழ்நாடு மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறை, தானியங்கிப் பொறியாளர், அரசுத் தானிங்கிப் பணிமனை, காஞ்சிபுரம் அவர்களின் செயல்முறை நடவடிக்கை மூ.மு.செ.மு.ஆணை எண்.அ4/1341/2022 நாள்.29.09.2022–ல் திருத்தணி நகராட்சியில் பொது சுகாதரப் பிரிவில் இயங்கும் வாகனம் TN 21 B 9437–னை கழிவு நீக்கம் செய்யவும் அதற்கான தொகை ரூ.60,500/–க்கு குறையாமல் விற்பனை செய்து கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது, எனவே மேற்படி வாகனத்தினை பொது ஏலம் மூலம் கழிவு நீக்கம் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : -**

தமிழ்நாடு மோட்டார் வாகனப் பராமரிப்புத் துறை மூலம் கழிவு நீக்கம் செய்ய நிர்ணயக்கப்பட்ட தொகைக்கு பொது ஏலம் மூலம் நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.252/2022/இ1)

**<u>பொருள் எண். 25</u>**

திருத்தணி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் 49.01 கீ.மீ அளவிற்க மழைநீர் வடிகால்வாய்கள் அமைந்துள்ளது மேலும் எதிர் வரும் வடகிழக்கு பருவ மழை துவங்க உள்ளதால் சிறுபாலங்கள் மற்றும் கால்வாய்கள் அடைப்பு ஏதும் இல்லாத வகையில் பராமரிக்கப்பட வேண்டும், மேலும் நகரின் பல பகுதிகளில் பொது மக்கள் அதிகம் வந்து செல்லும் பாதைகளில் உள்ள முட்புதர்களை நீக்கம் செய்யப்பட்ட வேண்டும் எனவே 2022–23–ஆம் ஆண்டிற்கு ஜே.சி.பி வாடகைக்கு சப்ளை செய்தல் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.3.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிகு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : -**

செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்த மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.252/2022/இ1)

**<u>பொருள் எண். 26</u>**

திருத்தணி நகராட்சி ஆணையர் பயன்பாட்டிற்கு புதியதாக வாங்கப்பட்ட வாகனம் எண்.TN TN 20 DY 9657 மற்றும் நகர மன்ற தலைவருக்கு புதியதாக வாங்கப்பட்ட வாகனம் எண்.TN 20 DY 9687 ஆகியே வாகனங்களுக்கு இருக்கைகள், கால் மிதி வாகனம் முழுவதும் பின்புறம் பம்பர்கள், ஆரன் மற்றும் உட்பகுதியில் LED விளக்குள் பொருத்தும் பணிக்கு 05.10.2022 அன்று வரப்பெற்ற உள்ளூர் விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | விலைப்புள்ளி அளித்தவரின் விவரம் | விலைப்புள்ளி விவரம் (ரூபாய்) |
|---|---|---|
| 1 | Nizhamuddin Auto Springs Works, Chennai by-Pass Road, Thiruthani – 631 209. | 45,100/– |
| 2 | Sri Balaji Auto Mobiles, No.55-A, Chennai Bye-Pass Road, thiruthani – 631 209. | 46,450/– |
| 3 | Sri Ganesh Maruthi Service Center, No.77A, 77B, Chennai Bye-Pass Road, Thiruthani – 631 209 | 46,800/– |

**அலுவலகக் குறிப்பு :–**

1. வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள Nizhamuddin Auto Springs Works, Chennai by-Pass Road, Thiruthani – 631 209. என்ற நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. செலவினத் தொகை ரூ.45,100/–னை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதி வழஙகலாம்.
   (ந.க.எண்.252/2022/இ1)

**பொருள் எண். 27**

திருத்தணி நகராட்சி பொது சுகாதரப் பிரிவில் இயங்கும் வாகனம் எண்.TN 20 CA 4542 Eicher-னை தகுதி சான்று பெரும் பொருட்டு வாகனத்தில் உள்ள பழுதுகளை நீக்கம் செய்தல் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.1.86 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : -**

செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்த மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.252/2022/இ1)

**பொருள் எண். 28**

திருத்தணி நகராட்சி பொது சுகாதரப் பிரிவில் இயங்கும் வாகனம் எண்.TN 20 BJ 6548 TATA Ace–ல் உள்ள இஞ்ஜின் பழுதடைந்து வாகனம் இயக்க இயலாத சூழல் உள்ளது, இதனால் வாகனத்திற்கு என ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள வார்டுகளில் திடக்கழிவு மேலாண்மை பணிகள் பாதிப்படைந்துள்ளது, எனவே வாகனத்தின் இஞ்ஜினில் ஏற்பட்டுள்ள பழுதுகளை நீக்கம் செய்யும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.49,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : -**

செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்த மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.252/2022/இ1)

**<u>பொருள் எண். 29</u>**

திருத்தணி நகராட்சிக்கு தூய்மை இந்தியா திட்டம் –2.0 222–23–ஆம் ஆண்டிற்கு அரக்கோணம் சாலை, மயானம் பகுதியில் புதிய பொது கழிப்பிடம் கட்டும் பணி (Type –I) மதிப்பீடு தொகை ரூ.32.00 லட்சத்திற்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணி உத்துரவு வழங்கப்பட்ட பணி துவங்கும் நிலையில் புதியதாக ஆழ்துளை கிணறு அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது, அவ்வாறு அமைக்கப்பட்ட ஆழ்துளை கிணற்றில் போதிய நீர் ஆதாரம் இல்லை, இதனால் பொது கழிப்பிடத்திற்கு போதிய தண்ணீர் கிடைக்க ஏதுவாக கழிப்பிடம் அமையும் இடத்திலிருந்து சுமார் 300 மீட்டர் தொலைவில் அமைந்துள்ள நகராட்சியின் ஆழ்துளை கிணற்றிலிருந்து பொது கழிப்பிடம் அமைந்துள்ள இடம் வரை PVC –பைப்லைன் அமைத்தல் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.48,000/–க்கு மன்த்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : -**

செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்த மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.252/2022/இ1)

**<u>பொருள் எண். 30</u>**

திருத்தணி நகராட்சி, 2022–ஆம் ஆண்டு வடகிழக்கு பருவ மழை துவங்க உள்ளது, எனவே நகராட்சி பகுதியில் அமைந்தள்ள 21 வார்டுகிளிலும் தொற்று நோய்கள் ஏதும் பரவா வண்ணம் கொசு மருந்து புகை வெ தளிப்பான் மூலம் நாள் தோறும் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும், மேலும் நகராட்சி பகுதியில் அமைந்துள்ள 49.01 கீ.மீ நீளம் கொண்ட மழைநீர் வடிகால்வாயில் கொசு புழு ஒழிக்கும் பணி மேற்கொள்ளப்பட வேண்டும் எனவே கொசு மருந்து புகை தெளிப்பான் இயந்திரத்திரத்திற்கு தேவையான மருந்து மற்றும் மழைநீர் வடிகால்வாயில் உள்ள கொசு புழுக்களை கட்டுப்படுத்த தேவைான மருந்தளை அரசு அங்கீகராம் பெற்ற தமிழ்நாடு மல்டி பர்பஸ் இண்டிகோ பர்பஸ் கூட்டுறவு சொசைட்டி லிட். , என்ற நிறுவனம் மூலம் வாங்கி வழங்கவும் அதற்கான தோராய செலவினம் தொகை ரூ.3.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு : -**

செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்த மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.252/2022/இ1)

# திருத்தணி நகராட்சி நகரமன்ற தலைவர் அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்

**பொருள் எண்– 31**

திருத்தணி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.11, ம.பொ.சி சாலையில் நகராட்சிக்கு சொந்தமான பூங்காவிற்கு எதிரில், திருமலை திருப்பதி தேவஸ்தானத்திற்கு சொந்தமான காலிமனையிடம் அமைந்துள்ளது. அவ்விடத்திற்கு அருகாமையில் உள்ள வணிக நிறுவனங்கள், தேநீர் கடைகள், தள்ளுவண்டி உணவகம் மற்றும் பழக்கடைகள் ஆகியவற்றில் உருவாகும் குப்பை கழிவுகளை, மேற்படி காலியிடத்தில் கொட்டப்பட்டு, அவ்விடம் முழுவதும் அசுத்தமாக உள்ளதோடு, அவ்வப்பொழுது குப்பைகள் மற்றும் பிளாஸ்டிக் கழிவுகள் எரியூட்டுவதால், அதன் மூலம் வெளியேறும் நச்சு வாயுக்களால், அருகாமையில் வசிக்கும் குடியிருப்புதாரர்கள் பெரும் சிரமத்திற்கு ஆளாகின்றனர். மேலும் தண்ணீர் தேக்கமடைந்து, அதன் காரணமாக கொசுப்புழுக்கள் உருவாகி, பொது மக்களுக்கு நோய்த் தொற்று ஏற்படும் அபாயத்தை ஏற்படுத்தியுள்ளது. மேலும் சில சமூக விரோதிகளாலும் மற்றும் பன்றி வளர்ப்போர் அங்கு பன்றிகளை வளர்ப்பதோடு, இரவு நேரங்களில் அடுப்பு மூட்டி, மதுவுடன் பன்றிக்கறி சமைத்து உண்பதாகவும், இதனால் மக்களுக்கு அச்சுறுத்தல் ஏற்படுவதாக புகார்கள் வருகிறது.

மேலும், திருத்தணி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் அறு படை வீடுகளில் ஒன்றான அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் அமைந்துள்ளது, எனவே பொதுமக்கள் மற்றும் பக்தர்களுக்கு நோய்த்தொற்று ஏற்படாதவாறும், நகராட்சியின் துய்மையினை காத்திடுறும், மேலும் மேலும் நகரின் அருகில் கோவில் திருத்தலமான காஞ்சிபுரம் அமைந்துள்ளது, காஞ்புரம் மார்கமாக திருப்பதி சென்று வரும் பக்தர்கள் பெரும்பாலும் பக்தர்கள் அனைவரும் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலுக்கு வந்து செல்கின்றனர், மேலும் இந்நகரமானது கோவில் நகரமாக இருப்பதால் நாள் ஒன்றுக்கு 15000–க்கு மேற்பட்ட பக்தர்கள் வந்து செல்கின்றனர். மேலும் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோவிலில் ஆண்டு தோறும் ஆடி கிருத்திகை திருவிழா மற்றும் திருப்படி திருவிழா ஆகிய இரண்டு திருவிழாக்களுக்கு வெளி மாவட்டம் மற்றும் வெளி மாநிலங்களில் இருந்து சுமார் 10 லட்சம் பக்தர்கள் வந்து செல்கின்றனர், மேலும் ஆந்திரா மாநிலத்திற்கு அருகில் உள்ள முக்கிய ஸ்தலமாக இந்நகரம் விளங்குவதால் மேற்படி திருமலை திருப்பதி தேவஸ்தானத்திற்கு சொந்தமான காலியிடத்தில், தேவஸ்தானம் சார்பாக கோயில் தரிசன விவரங்களை பொது மக்கள் அறிவும் வண்ணம் Informanation Center மற்றும் திருமண மண்டபம் அமைத்து பாரமரிக்க கோரி திருப்பதி தேவஸ்தானத்திற்கு கடிதம் அனுப்ப தீர்மானிக்கலாம்.